செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
40, சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகம், நூறடிச் சாலை, தரமணி, சென்னை – 600113
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under Ministry of Education, Government of India)
40, IRT Campus, 100 Feet Road, Taramani, Chennai - 600113
Website : www.cict.in E-Mail : director@cict.in
Phone : 044 - 22540124

# அயலகத் தமிழ்ப் புலம்

## நடத்தும்

## செவ்வியல் தமிழுக்கு அயல்நாட்டாரின் பங்களிப்பு

## பயிலரங்கம் – 14

## (08.12.2021 – 14.12.2021)

## அறிவிப்பும் அழைப்பும்

தமிழ்மொழி காலங்களைக் கடந்தும் தன்னை வளப்படுத்திக் கொண்டே வளர்ந்தது. கற்றறிந்த சான்றோர்கள் தமிழைச் செம்மொழியாக்க மூலமானார்கள். தமிழ் மட்டுமே அறிந்த பாமரத் தமிழர்கள் தமிழில் பேசிப் பேசிக் காத்தார்கள், தங்கள் வாரிசுகள் மூலம் தடையில்லாமல், தமிழை அடுத்தடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சென்றனர்.

புலவர்கள் வளர்த்தார்கள்; தமிழ் மக்கள் காத்தார்கள்.

சங்ககாலம் – (களப்பிரர்) இருண்டகாலம் – சங்கம் மருவிய காலம் – பக்தி இலக்கியக் காலம் – சமயங்கள் கோலோச்சிய காலம் – அயல் மொழியினர் ஆண்ட காலம் என்று உச்சியும் சரிவும் தமிழ் மண்ணில் நிகழ்ந்தபோதும் தமிழ் மொழி உயிர்ப்புடன் பயணித்து வந்துள்ளது என்பது வரலாற்று உண்மை.

தொன்மைச் செந்தமிழ், பன்னாட்டு அறிஞர்களைத் தம்பால் ஈர்த்தது. கடந்த பல நூற்றாண்டுகளாக அயல்மொழி அறிஞர்கள் பலர் தமிழுக்குப் பன்முக நோக்கில் தொண்டாற்றியிருக்கிறார்கள். தமிழ் தனித்து இயங்கும் மொழி; தாய்மொழி அமைப்பு வேறு; வடமொழி அமைப்பு வேறு' என்று ஆய்வு நெறி நின்று விளக்கித் தமிழுக்குப் பெருமை சேர்த்தனர். அகராதி,மொழிபெயர்ப்பு, திறனாய்வு, நாட்டுப்புறவியல், படைப்பிலக்கியம் முதலிய துறைகளுக்கு முன்னோடியாக விளங்கியவர்கள். இந்தியத் துணைக் கண்டத்தில் இந்திய மொழிகளில் முதன்முதலில் தமிழ்மொழியை அச்சேற்றிய பெருமை இவர்களைச் சாரும்

சீகன் பால்கு, எல்லீஸ்துரை, கால்டுவெல், ஜி. யு. போப், வீரமாமுனிவர் ஆகியோர் காலனியாட்சிக் காலத்தில் தமிழுக்குப் பெருந்தொண்டு புரிந்தனர். அவ்வழியில் ஜார்ஜ் ஹார்ட், கைம்ராபின், துபியான்ஸ்கி, கமில் சுவெலபில், அஸ்கோ பர்ப்போலா, வாசெக், பிரான்சுவா குரோ, ஆந்த்ரொனோவ் போன்ற அயல்மொழி அறிஞர்களின் அருந்தொண்டுகள் இன்றும் தொடர்கின்றன. அவற்றை நன்றியுடன் நினைவுகூர கடமைப்பட்டுள்ளோம்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அயலகத் தமிழ்ப் புலம் (Faculty of Overseas Tamil) ‘செவ்வியல் தமிழுக்கு அயல் நாட்டாரின் பங்களிப்பு’ எனும் பொருண்மையில் பயிலரங்கம் ஒன்றினை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கமானது தமிழின் பெருமையையும், அயல்நாட்டுத் தமிழ் அறிஞர்களின் பங்களிப்பையும், சங்ககால மக்களின் வாழ்வியலையும், மொழிபெயர்ப்பு, உரைகள், இலக்கணம், மொழியியல், சொற்களஞ்சியக்கலை, உரைநடை, கவிதை போன்ற பொருண்மையில் எடுத்துரைக்கும் வகையில் தமிழ் அறிஞர்களைக் கொண்டு ஏழு நாட்கள் நடைபெறவுள்ளது. இத்துறை சார்ந்த கல்லூரி, பல்கலைக்கழக பேராசிரியர்கள் பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெற அழைப்பு விடுக்கப்படுகிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை 20.
2. பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 08.12.2021 முதல் 14.12.2021 முடிய ஏழு நாட்கள்.
3. பயிலரங்கு நேரம்: காலை: 10.00 - 01.00 & மாலை: 02.00 - 05.00.
4. பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் மத்திய அரசு விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
6. பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இதன் கீழுள்ள விண்ணப்பத்தை நிறைவுசெய்து workshopo@cict.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல் விவரங்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாகவே தொடர்புகொள்ள வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் தொலைபேசி/அலைபேசி வழியாகத் தொடர்புகொள்ளக்கூடாது.
8. பயிலரங்கக் கட்டணம் ஏதும் இல்லை.
9. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.

10. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.
11. நிறைவு செய்யப்பெற்ற விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் 02.12.2021. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
12. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு 03.12.2021 அன்று மின்னஞ்சல்/புலனம் மூலமாகத் தகவல் தெரிவிக்கப்படும்.

## செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை

## அயலகத் தமிழ்ப் புலம்

நடத்தும்

செவ்வியல் தமிழுக்கு அயல்நாட்டாரின் பங்களிப்பு பயிலரங்கம்
**(08.12.2021 – 14.12.2021)**

நிழற்படம்

## விண்ணப்பப் படிவம்

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| 2. | பிறந்த நாள்/ வயது | | |
| 3. | பாலினம் | | |
| 4. | வகுப்பு (✓ செய்க) | | பொது ☐ இ.பி.வ. ☐ பட்டியல் இனத்தவர் ☐ |
| 5. | கல்வித் தகுதிகள் | | |
| 6. | முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ஆண்டு | | |
| 7. | முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு | | |
| 8. | பல்கலைக்கழகம்/கல்லூரி/நிறுவன முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 9. | இல்ல முகவரி (தொலைபேசி/ மின்னஞ்சல் முகவரியுடன்) | | |
| 10. | புலன எண் | | |
| 11. | செம்மொழி நிறுவனம் இக்கல்வியாண்டில் நடத்திய பயிலரங்கில் கலந்து கொண்டீர்களா? ஆம் / இல்லை ஆம் எனில் விவரம் தருக | | |

நாள் :

இடம்:

**(கையொப்பம்)**

துறைத்தலைவர் / முதல்வர் / பதிவாளர்

உரிய முத்திரையுடன் கையொப்பம்